பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 06 திங்கட்கிழமை 22.09.2025 | அதிர்வு 53

## சஷீந்திர ராஜபக்ஷவின் பிணை மனு நிராகரிப்பு

### விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 30 ஆம் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்த முயற்சி

## அரசின் நிலைப்பாட்டை யாழில் இன்று அறிவித்தார் பிரதி அமைச்சர் ஜயசிங்க

(எஸ்.நிதர்ஷன்)

எமது அரசு அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்கின்றது என்று தொழிற்துறை பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களமும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் விசேட தொழிற்சந்தை இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. 03



# கோர விபத்தில் சிக்கிய இளைஞர் 21ஆவது பிறந்தநாளில் உயிரிழப்பு

(க.கிஷாந்தன்)

கோர விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இன்று காலை உயிரிழந்தார் என்று நுவரெலியா பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் நுவரெலியாவின் ஹாவா எலியா பகுதியைச் சேர்ந்த மனித் அபுர்வ என அடையாளம் காணப்பட்டுள்ளார். 02



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# யாழ். சர்வதேச விளையாட்டு மைதானம் அமையவுள்ள காணிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சர்வதேச விளையாட்டு மைதானம் அமையவுள்ள காணிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் நீதிமன்ற அனுமதியுடன் இன்று மீட்கப்பட்டுள்ளன.

மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் நிலத்தில் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்க அனுமதி கோரி ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்கும் பணிகளை இன்று முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதித்ததைத் தொடர்ந்து துப்பாக்கி ரவைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

# சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமான காணியில் ஆயுதங்கள், வெடி மருந்துகள் கண்டுபிடிப்பு!



மித்தெனியவில் சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமான காணியில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, இரண்டு ரி - 56 மகசின்கள், 115 சுற்றுகள் ரி - 56 வெடி மருந்துகள் மற்றும் ஒரு கைக்குண்டு ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மித்தெனியவில் உள்ள ஒரு காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பத் மனம்பேரியை ஏழு நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துக்குக் கடந்த 17ஆம் திகதியன்று வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

பாதாளஉலகக்குழுத்தலைவர்கெஹல் பத்தர பத்மேவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரசாயனங்களை இரண்டு கொள்கலன்களில் மறைத்து வைத்ததாக சம்பத் மனம்பேரி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, மித்தெனியவில் அண்மையில் இரண்டு கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சம்பத் மனம்பேரியிடம் விசாரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோர விபத்தில்...

இராகலை - நுவரெலியா பிரதான வீதியில் ஹாவா எலியா சந்தியில் நேற்று இரவு 9:30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நுவரெலியா பொலிஸின் போக்குவரத்து அதிகாரிகள், தனது வீட்டில் இருந்து நுவரெலியா நகருக்குள் தனது மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர், அந்தச் சந்தியில் இருந்து நுவரெலியா நகருக்குள் செல்ல முற்பட்டபோது, இராகலையில் இருந்து நுவரெலியா நோக்கி அதிவேகமாகச் சென்ற லொறி மீது மோதியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகத்தின் பேரில் லொறியின் சாரதியை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இளைஞரின் 21 ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

இவர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த சகோதர இனத்தைச் சேர்ந்த பிராந்திய செய்தியாளர் சம்பத் ஜெயலாலின் ஒரே மகன் ஆவார்.

### சஷீந்திர...

திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சஷீந்திர ராஜபக்ஷ இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சஷீந்திர ராஜபக்ஷவின் பிணை மனுவைக் கொழும்பு பிரதான நீதவான் நிராகரித்துள்ளார்.

2022ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மாகாண சபை...**

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தொழிற்துறை பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மூன்று தேர்தல்களை நடத்தியுள்ளது. தற்போது நாட்டில் அபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்குத் தடை வராமல் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி செய்கின்றோம்.” – என்றார்.
























# யாழ்ப்பாணத்தில் விசேட தொழிற்சந்தை

## பெருமளவு இளைஞர், யுவதிகள் பங்கேற்பு

**(பிரபாகரன் டிலக்சன்)**

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் விசேட தொழிற்சந்தை இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தொழிற்துறை பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர். கிரியெல்ல மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தொழிற்துறை பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்கவினால் விசேட தொழிற்துறை கண்காட்சியும் மாவட்ட செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருமளவு இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.












# நல்லூர் மந்திரிமனையைப் பாதுகாக்கக் கோரி நலன் விரும்பிகள் இணைந்து இன்று கவனவீர்ப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழர்களின் பாரம்பரிய சொத்தான யாழ். நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனையைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழர்களுடைய மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க விரும்புகின்ற நலன் விரும்பிகள் இணைந்து இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை மந்திரிமனைக்கு முன்னால் நடத்தினார்கள்.

இதில் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவரும், தமிழர்களின் சின்னங்களைப் பாதுகாக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

அத்துடன் மந்திரிமனை அமைந்துள்ள அந்த நிலத்தைக் காணி உரிமையாளர் நல்ல நோக்கம் கருதிக் கையளிக்க வேண்டும் என்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

தொடர்ந்தும் அசமந்தப்போக்குகள் தொடருமானால் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாங்கள் தொடர்ந்து நடத்த இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்





# குச்சவெளியில் 548.5 ஏக்கர் காணி விவசாயத்துக்கு மக்களிடம் விடுவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளியில் 548.5 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவின் முயற்சியால் இது விடுவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த 548.5 ஏக்கர் நிலம் விவசாய நடவடிக்கைகளுக்காக பொது மக்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கள்ளம்பத்தை - புளியடிக்கண்டல் 175 ஏக்கர், கள்ளம்பத்தை - கள்ளம்பத்தை வெளி 163 ஏக்கர், காசீம் நகர் -இலந்தைகுளம் 135 ஏக்கர், கும்புறுபிட்டி வடக்கு - மடுவாகுளம் 20 ஏக்கர், கும்புறுபிட்டி வடக்கு - கல்லிப்பிளவு 17 ஏக்கர், புல்மோட்டை 01 - பழையஇறக்கம் 20 ஏக்கர், புல்மோட்டை 04 - சூதயன்நகர் 18.5 ஏக்கர் போன்றன விடுவிக்கப்பட்டுள்ளன. இதற்காக தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக குச்சவெளி காணி அபகரிப்பு தொடர்பாகவும் ஏனைய இடங்களில் உள்ள காணி அபகரிப்பு தொடர்பிலும் குச்சவெளி மக்களுடனான கலந்துரையாடல் 26.05.2025 அன்று மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பிரதி அமைச்சர் உள்ளிட்ட பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் தொடர் நடவடிக்கையின் மூலம் குறிப்பிட்ட நிலங்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தம் நிறைவுற்றதுக்குப் பின்னர் கிட்டத்தட்ட 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மக்கள் காலாகாலமாக விவசாயம் மேற்கொண்டு வந்த மற்றும் மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வந்த பல ஆயிரம் ஏக்கர் காணிகள் வன வள பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் வர்த்தமானி அறிவித்தல் இன்றி கையகப்படுத்தப்பட்டிருந்தன.


இந்த நிலையில் மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்களுடைய, மக்கள் தொடர்ச்சியான பயன்படுத்திவந்த அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கு அவசியமான காணிகள் என்ற அடிப்படையில் 41361 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டன.

இவற்றை விடுவிக்கக்கோரி வனவள பாதுகாப்பு திணைக்களத்திடம் பல வருட காலமாக அதிகாரிகளால் கோரிக்கை முன் வைக்கப்பட்டு வந்தபோதும் எதுவும் சாத்தியமாகவில்லை. இருப்பினும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 10432 ஏக்கர் காணிகளை விடுவிக்க கோரி வந்த நிலையில் தற்போது 548.5 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இது இந்த அரசின் மக்கள் நலன் கருதிய ஆட்சியாலும், பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் முயற்சியாலுமே சாத்தியமானது என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.அத்துடன் இதற்காக உழைத்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலருக்கும் குச்சவெளி விவசாயிகள் தமது நன்றிகளை கூறி வருகின்றனர்.

இதேபோன்று மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள மக்களுடைய நிலங்கள் விடுவிக்கப்பட்டு மக்களதும், நாட்டினதும் பொருளாதார வளர்ச்சிக்காக அவை பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரினம் அவா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு வட்டுவாகலில் வீட்டின் மீது மர்ம நபர்கள் பெற்றோல் குண்டு தாக்குதல்





(பா.சதீசன்)

வட்டுவாகல் பகுதியில் இனந்தெரியாதோரால் இன்று (22) அதிகாலை வீடு ஒன்றுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவரின் வீட்டுக்கே விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இன்று (22) அதிகாலை 2 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மதிலால் ஏறி மின்சாரத்தைத் துண்டித்து வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தீ வைத்துவிட்டு தப்பி சென்றுள்ளனர். இந்த நிலையில் வீட்டுக்குள் தூங்கிக்கொண்டிருந்த வீட்டின் உரிமையாளர் தீ பற்றியதைக் கண்டு வீட்டுக்கு வெளியே வந்து உறவினர்களின் உதவியுடன் தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இனந்தெரியாத விசமிகள் வைத்த தீயில் வீட்டின் முன்பகுதி எரிந்ததுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாரதி அனுமதிப் பத்திரம்

நாட்டில் மனதை நெருடும் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்ற விவகாரமாக விபத்து மரணங்கள் மாறி வருகின்றன. இந்த வருடத்தில் இதுவரை 1,960 பேருடைய உயிர்களை விபத்துக்கள் காவு கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கை தடுப்பதற்கு அரசு காத்திரமான சில நடவடிக்கைகளை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புக்கள் மற்றும் பாதிப்புகளை குறைக்கும் விதத்தில் முதல் நடவடிக்கை கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் இருந்த போதும் எடுக்கப்பட்டது. அப்போது சாரதிகள் மற்றும் முன் ஆசனங்களில் இருப்பவர்கள் ஆசனப்பட்டி அணிவது கட்டாயம் என்ற நடைமுறை கொண்டு வரப்பட்டது. இது ஒரு முக்கிய ஒழுங்காக அமைந்தது. ஆயினும் ஆசனப் பட்டி வசதி கொண்டிராத பழைய வாகனங்களில் இந்த விதி நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் இப்போது இந்த அரசு எல்லா வாகனங்களிலும் ஆசனப் பட்டி இணைக்கப்பட்டு, சாரதிகள் நிச்சயம் ஆசன பட்டி அணிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை கொண்டு வந்திருக்கின்றது. நல்ல திருப்பம்.

அதிபார வாகனங்களுக்கான சாரதி அனுமதி பத்திரம் வைத்திருக்கின்ற அனைவரும் பயணிகள் பயணிக்கக் கூடிய வாகனங்களைச் செலுத்தலாம் என்ற நடைமுறைக்குக் கட்டுப்பாடு கொண்டு வந்திருக்கிறது தற்போதைய அரசு.

பயணிகள் வாகனங்களை செலுத்துபவர்கள் மேலதிகமாக அதற்கான விசேட பயணிகள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கி இருக்கின்றது அரசு. இத்தகைய பயணிகள் வாகனங்களுக்கான சாரதி அனுமதி பத்திரங்களை பெறும் போது அல்லது அவற்றைப் புதுப்பிக்கும் போது சாரதிகள் போதைப் பொருள் பயன்படுத்துகின்றார்களா என்ற மருத்துவச் சோதனைக்கு உட்படுத்துவதும் கட்டாயப்படுத்தப்படுவதாக தெரிகிறது. இது பயணிகள் பயணத்தை ஆபத்துக்களில் இருந்து தவிர்க்கச் செய்வதற்கான முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

போதைப் பொருள் பயன்படுத்துவது தொடர்பான மருத்துவ சோதனையை எல்லா வாகன சாரதி பத்திரங்கள் வழங்குவதற்குமான முன்நிபந்தனைகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்வது வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான முக்கிய விடயமாக அமையக்கூடும்.

ஆரம்பத்தில் பயணிகள் வாகனங்களை செலுத்துவோருக்காக அறிமுகப்படுத்தப்படும் என்ற இந்தக் கட்டுப்பாடு நிபந்தனை காலக்கிரமத்தில் முழு வாகன சாரதி அனுமதிப் பத்திரங்களுக்குமான நிபந்தனையாக மாற்றப்பட வேண்டும்.

ஏனெனில் சாரதிகளின் தவறால் ஏற்படும் விபத்துகளில், அந்த வாகனத்தில் பயணிப்போர் மாத்திரமல்லர், வீதிகளில் அப்பாவிகளாக நடந்து செல்வோரும், பிற வாகனங்களில் செல்வோரும் கூட பாதிக்கப்படுகின்ற நிலைமை உண்டு.

ஆகவே சாரதி அனுமதி பத்திரம் வழங்குவதற்கான அடிப்படை விடயங்களில் இந்த விவகாரத்தை முக்கிய நிபந்தனையாக்குவது கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

போதைப் பொருள் பயன்படுத்துவோர் எந்த வானத்தினதும் சாரதிகள் இருக்கையில் அமர்வதற்கு இடமேயளிக்காத வகையில் சட்ட - ஒழுங்கு விதிகள் கொண்டு வரப்படுவது நாகரிக உலகில் கட்டாயமான விடயமாக்கப்பட வேண்டும்.





# தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நேற்று இடம்பெற்றது இரத்ததான நிகழ்வு

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், தியாக தீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று (21) இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இதில் பொது மக்கள் பலர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.











# மாலைதீவு தூதர், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ஊடக மாநாடு கொழும்பு மாலைதீவு அலுவலகத்தில்!

(அஷ்ரப் ஏ சமத்)

பம்பலப்பிட்டியில் உள்ள மாலை தீவு தூதர் அலுவலகத்தின் இன்று (22) திங்கட்கிழமை ஊடக மாநாடு நடை பெற்றது. இந்த மாநாட்டில் மாலைதீவின் இலங்கைக்கான தூதரமசூட் இமாட், மாலைதீவின் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அஹமட் சிஹறான் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர்.





# வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாட்டில் 81ஆவது இரத்ததான நிகழ்வு!

யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது மிகவும் வேதனையான விடயம் ஆகும்.

இந்த நிலையில் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம் ஊடாக 81 ஆவது இரத்ததான நிகழ்வானது எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் கணபதி மஹால் திரு மண மண்டபம் நெடியகாடு வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட 55 வயதுக்கு உட்பட்ட குருதிக் கொடை வழங்க விரும்பும் அனைவரும் முன்பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




தற்போதைய சூழ்நிலையில் விபத்துகளின் அதிகரிப்பு மற்றும் அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் குருதி இழப்பை ஈடு செய்ய போதிய அளவு குருதிக் கொடை வழங்க தகுதி வாய்ந்தவர்கள் முன்வரவில்லை என்பது வேதனையான விடயம் என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் குருதிக் கொடை வழங்குவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரனால் “வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம்” என்று பதித்த பெறுமதியான வெள்ளிப் பதக்கம் அணிவிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 0779911131 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 4 இலட்சம் ரூபா பெறுமதியான குடி தண்ணீர் சுத்திகரிப்புத் திட்டம்!

## வரணி பாடசாலை ஒன்றுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கல்

யாழ்ப்பாணம், வரணி, இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 162 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் ஏற்பட்டுள்ள குடி தண்ணீர் இன்மையை சீர் செய்வதற்காக, சந்நிதியான் ஆச்சிரமத்தின் 4 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

இன்று (22) திங்கள்கிழமை காலை 9.45 மணியளவில் பாடசாலை முதல்வர் அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகளால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் நிகழ்வில் பங்கு கொண்டனர்.







# இலங்கை காந்தி சேவா சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவானது

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய நிலையத்தில் இடம்பெற்றது.

பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக பேராசிரியர் சு.மோகனதாஸ், பொதுச் செயலாளராக மா.பேரம்பலம், பொருளாளராக சி.சிவனேசன், உபதலைவர்களாக த.நந்திவர்மன், செ.சுப்பிரமணியம், உபசெயலாளர்களாக ரதிகுலசேகரம், சி.சிவரம்யா, நிர்வாக உறுப்பினர்களாக ப.சதானந்தன், கா.கார்த்திகேசு, எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, சி.ஜெயசங்கர், இ.நாகேந்திரராசா, இரா.செல்வராசா ஆகியோரும் “காந்தீயம்” பத்திரிகை ஆசிரியராக எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டனர்.





# அளவெட்டி அருணோதயாவில் மனைப் பொருளியல் கண்காட்சி

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நேற்று (21) மனைப் பொருளில் கண்காட்சி ஒன்று இடம் பெற்றது.

கல்லூரி முதல்வர் ஜெயானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மாணவரின் ஆக்கங்கள் பலவும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இவ்விழாவில் மாணவரின் பாரம்பரிய உணவுத் தயாரிப்புக்கள் பலரையும் கவர்ந்தது.

இங்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் மனைப் பொருளியல் அலகின் தலைவர் திருமதி மேனகா சிவகரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் அருந்தவம் மற்றும் மனைப்பொருளியல் அலகின் விரிவுரையாளர்களான முகம்மது சாரிப், டிலக்ஷிகா ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# கஜபா படைப்பிரிவின் 14ஆவது பட்டாலியனின் ஏற்பாட்டில் கர்ப்பிணிகளுக்கு மருத்துவ முகாம்!















யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 40 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மருத்துவ முகாம் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் அத்தியாவசியப் பொதிகள் விநியோகம் என்பன கடந்த (19) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நவந்துறை, பொம்மைவெளியில் அமைந்துள்ள குடும்ப மருத்துவமனை சுகாதார நிலையத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 512 ஆவது காலாற்படை படையணியின் மேற்பார்வையின் கீழ், 51 ஆவது காலாற்படை பிரிவு மற்றும் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் வழிகாட்டுதலின் கீழ், யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாண சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து, கஜபா படைப்பிரிவின் 14 ஆவது பட்டாலியன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதி மேஜர் ஜெனரல் கே.ஏ.என். ரசிக குமாரவை (என்.டி.சி. பிஎஸ்சி) 51 ஆவது காலாற்படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.பி.என்.ஏ. முத்துமால யு.எஸ்.பி. பிஎஸ்சி, 512 ஆவது காலாற்படை படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் எல்.ஏ.ஆர். குணரத்ன (ஆர்.எஸ்.பி. யு.எஸ்.பி. ஐ.ஜி.) மற்றும் கஜபா படைப்பிரிவின் 14 ஆவது பட்டாலியன் கட்டளை அதிகாரி மேஜர் கே.ஜி.டி. ஜெயவர்தன (ஆர்.டபிள்யூ.பி. ஆர்.எஸ்.பி. பிஎஸ்சி) ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ ஆலோசகர் டாக்டர் என். சரவணபவவால் மருத்துவ கிளினிக்குடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் மற்றும் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரிகளது ஆதரவுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் அத்தியாவசியப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. மருத்துவமனை வளாகத்தில் அனைத்து பயனாளிகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

தாய்வழி ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, அடுத்த தலைமுறையினர் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள அறிவுபூர்வமாகவும், கனிவானவர்களாகவும், உடல் ரீதியாகவும் மீள்தன்மை கொண்டவர்களாகவும் வளர்வதை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டம் சிவில் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், அமைதியான சகவாழ்வை வளர்க்கவும் உதவியது என்றும் இதன் மூலம் வட இலங்கையில் நிலையான அமைதிக்கான வலுவான அடித்தளத்தை அமைத்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான அனுசரணையை சிலோன் கிரீன் பிளாண்டேஷன் (பிரைவேட் லிமிடெட்) நிறுவனம் வழங்கியது. அதன் தலைமை நிர்வாக அதிகாரி யு.எஸ். கொத்தலாவல மற்றும் அவரது ஊழியர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.






# உலக சமாதான தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று நடைபவனி!

செல்வநாயகம் நினைவு அறக் கட்டளையின் அனுசரணையுடன் வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 இளைஞர்களுக்குச் சமாதானம் தொடர்பாகப் பயிற்சியூட்டப்பட்டு அவர் களால் உலக சமாதான தினத்தை முன்னிட்டு ஒரு நடைபவனி நடத்தத் திட்டமிடப்பட்டது.

இந்த நடைபயணமானது உலக சமாதான தினத்தை முன்னிட்டு நேற்று (21) கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து ஆரம்பமாகிக் கிளிநொச்சி பஸ் நிலையம்வரை தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களால் பல்வேறுபட்ட சமா தான எண்ணக்கரு தாங்கிய பதாகைகள் ஏந்திய வண்ணம் மேற்கொள்ளப்பட்டது.



இந்த நடைபயணத்தில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள், மத குரு மார்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# ஜனாதிபதி செயலகத்தின் ஏழாம் கட்ட நிதியுதவி!

**(சர்ஜுன் லாபீர்)**

ஜனாதிபதி செயலகத்தால் சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இந்தமுறை நிகழ்நிலை மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கு அமைய பிரதேச செயலகங்களின் ஊடாக நிகழ்நிலை அடிப்படையில் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறுகின்றன.

அந்த வகையில் ஜனாதிபதி செயலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு பின்னர் மேன்முறையீட்டு மூலம் ஏற்றுக் கொள்ளாப்பட்ட மலையடிக்கிராமத்தைச் சேர்ந்த -04 கே.எல்.ஏ. கரீம் என்பவருக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கான ஐந்து இலட்சம் ரூபா நிதி உதவிக்கான காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிதியுதவி வழங்கி வைக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் இன்று (22) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் வீ.வாசீத் அஹமட், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமில், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம். சாபீர் (மத்திய) அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ரிபாஸ், கிராம சேவை உத்தியோகத்தர் எம். ஜே.எம். இன்சாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முத்துநகர் விவசாயிகளது போராட்டம் 6ஆவது நாளாக இன்று தொடர்கிறது!




திருகோணமலை – முத்துநகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக தொடர் சத்தியாக்கிரக போராட்டமாக தொடர்ந்தும் இன்று 06 ஆவது நாளாகவும் (22) தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

“விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு!, இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்!, பொய்கள் வேண்டாம், விவசாயிகளை இப்படியா நடத்துவது போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் முத்து நகர் விவசாயிகள் மற்றும் மக்கள் போராட்ட இயக்கம், அகில இலங்கை விவசாய சம்மேளன பிரதிநிதிகள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முத்து நகர் விவசாயிகளின் விவசாய காணிகளை தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்டதை அடுத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் தற்போது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

கடந்த அரசு போலவே இந்த அரசும் நடக்கின்றது. வெளிநாடுகளுக்கு மக்கள் விவசாய காணிகளை தாரை வார்த்து கொடுத்துள்ளனர். முத்து நகர் மக்களின் விவசாய காணிகளை தற்போது அபகரித்துள்ளனர். ஜனாதிபதி செயலகம் வரை போராடிய முத்து நகர் விவசாயிகளுக்கு தீர்வில்லை. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதும் தீத்வு தருவதாக கூறியவர்கள் தீர்வு வழங்கவில்லை. இது போன்று சம்பூரிலும் காணிகளை அபகரித்துள்ளனர். எனவே மக்கள் பிரச்சினைகளை சமூகமாக தீர்த்து வையுங்கள் என்றுவிவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# விஜய்யை பார்க்க வரும் கூட்டம் தேர்தலில் வாக்குகளாக மாறாது

## கமல்ஹாசன் கருத்து



இது சினிமாவுக்கான களம் அல்ல. விஜய்க்கு வரும் கூட்டம் எல்லாம் வாக்குகளாக மாறாது என்று ம.நீ.ம. தலைவர் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை தேர்தலுக்கான பணிகள் தொடர்பான மண்டல அளவிலான கலந்தாலோசனை கூட்டங்களை மக்கள் நீதி மய்யம் கட்சி கடந்த 18 ஆம் திகதி முதல் சென்னையில் நடத்தி வருகிறது.

அதன் தலைவர் கமல்ஹாசன் தலைமை வகித்து மண்டல வாரியாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். அந்தவகையில் கடந்த 18 ஆம் திகதி சென்னை, காஞ்சிபுரம் மண்டல நிர்வாகிகளுடனான ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து கோவை, மதுரை மண்டல நிர்வாகிகளுடனான கலந்தாலோசனை கூட்டம் 19 ஆம் திகதி, நெல்லை, திருச்சி மண்டல நிர்வாகிகளுடனான கூட்டம் 20 ஆம் திகதியும் நடைபெற்றது. இதையடுத்து சேலம் மற்றும் புதுச்சேரி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் ராஜா அண்ணாமலைபுரத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் முடிவில் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மக்களுக்காக அரசியலுக்கு வரும் நடிகர்களை அரசியல் வாதிகளாக பார்க்காமல், அவர்களுக்கு கூடும் கூட்டங்களை அவரை பார்ப்ப கூட்டமாகவே பார்ப்ப தாக த.வெ.க. தலைவர் விஜய்யை விமர்சிக்கின்றனர்.

அவருக்கு முன்பு சினிமாவில் இருந்து வந்த என்னை பற்றி என் கட்சியினரிடம் கேட்டால் தெரியும். என்னை ஏன் நாடி வந்தார்கள் என்று. அரசியலுக்கு வருபவர்களை மட்டுமின்றி, நடிக்க வருபவர்களையும் கூட விமர்சிக்கத்தான் செய்வார்கள்.

இது சினிமாவுக்கான களம் அல்ல. அதை புரிந்துகொண்டவர்கள் இங்கு இருக்கின்றனர். இங்கு கூடக்கூடிய கூட்டங்கள் அனைத்தும் வாக்குகளாக கண்டிப்பாக மாறாது. அது விஜய்க்கும் பொருந்தும்.

எனக்கும் பொருந்தும். எல்லா தலைவர்களுக்கும் பொருந்தும். கூட்டத்தை சேர்த்துவிட்டால் அது வாக்குகளாக மாறாது. நல்ல பாதையில் செல்லுங்கள். தைரியமாக முன்னேறுங்கள். மக்களுக்காக செய்யுங்கள் என்பது தான் எல்லா அரசியல் வாதிகளுக்கும் நான் வைக்கும் வேண்டுகோள். அந்தவகையில் எத்தனை பேர் அரசியலுக்கு வந்தாலும் நல்லது தான். திமுக தலைமையுடன் நெருக்க மாக இருக்கிறோம். இருந்தாலும் கூட்டணிக்கான இடங்கள் உட்பட 75 ஆண்டுகால கட்சியிடம் அனைத்து உரிமைகளையும் தட்டி கேட்டு பெற்று விட முடியாது. எங்களது தகுதியை நிரூபித்து, பின் எங்களுக்கானதை கொடுங்கள் என்று கேட்போம். " என்றார்.

# பிரசாரத்துக்கு வரும் கூட்டம் நிச்சயம் வாக்குகளாக மாறும்

## நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



அ.தி.மு.க. பிரசாரத்துக்கு வரும் கூட்டம் நிச்சயம் வாக்குகளாக மாறும் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியை சேலத்தில் உள்ள அவரது இல்லத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று சந்தித்துப் பேசினார்.

சேலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்த பா.ஜ.க. மேலிடப் பார்வையாளர் அரவிந்த் மேனன், மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர், நெடுஞ்சாலை நகரில் உள்ள பழனிசாமி வீட்டுக்குச் சென்று, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக ஆலோசனை நடத்தினர். பின்னர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கருத்து தெரி விக்கையில்,

"பிரதமர் மோடியின் 75 ஆவது பிறந்தநாளையொட்டி நாடு முழுவதும் 75 இடங்களில் மினி மாரத்தான் போட்டி நடத்தப்படுகிறது.

அதன்படி, சேலத்தில் நடந்த மாரத்தான் போட்டி தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்க வந்தோம். இந்நிலையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினோம்.

இந்த சந்திப்பில் அரசியல் எதுவும் பேசவில்லை. அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பரும் இல்லை. மக்கள் நலனை முன்னிறுத்தி தேர்தலை சந்திக்கும்போது, பெரிய மாற்றங்கள் ஏற்படும். அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி செல்லும் இடங்களில் எல்லாம் பெரிய எழுச்சியை பார்க்க முடிகிறது.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகியோர் என்.டி.ஏ. கூட்டணியில் இணைவார்களா என்பது குறித்து, அவர்களிடம் தான் கேட்க வேண்டும். வரும் தேர்தலில் தி.மு.க, த.வெ.க-வுக்கு இடையில்தான் போட்டி என்று விஜய் சொல் வதை ஏற்க முடியாது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி 4 ஆண்டுகள் முதல்வராக இருந்துள்ளார். மத்திய அரசிடம் இருந்து எப்படி நிதி வாங்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். அவருக்கு வரும் கூட்டம் நிச்சயம் வாக்குகளாக மாறும்." என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கர்கள் வேலை பறிபோவதை தடுப்பதற்காகவே புதிய கட்டுப்பாடு

## வெள்ளை மாளிகை அறிக்கை வெளியீடு

அமெரிக்கர்களின் வேலை பறி போவதை தடுக்க ஜனாதிபதி ட்ரம்ப் எடுத்த நடவடிக்கை சரியானதுதான் என்று கூறி ‘உண்மை அறிக்கை’ ஒன்றை வெள்ளை மாளிகை நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“அமெரிக்காவில் அமெரிக்கர்களுக்குப் பதில் குறைந்த சம்பளத்தில் பணியாற்றக் கூடிய வெளிநாட்டினருக்கு வேலை வழங்கப்படுகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டு எச்-1பி விசா பெறும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களின் எண்ணிக்கை 32 சதவீதத்தில் இருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனால் அமெரிக்கர்களிடையே வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருகிறது.



அறிவியல், தொழில்நுட்பம், இன்ஜினீயரிங், கணிதம் (ஸ்டெம்) ஆகிய 4 துறைகளில் வெளிநாட்டினரின் எண்ணிக்கை கடந்த 2000 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அமெரிக்க நிறுவனங்கள் எச்-1பி விசாக்களை பயன்படுத்தி, அமெரிக்கர்களுக்குப் பதில் வெளிநாட்டினரை பணியில் அமர்த்துகின்றன. ஒரு நிறுவனம் 2025 ஆம் ஆண்டு 5,189 எச்-1பி விசா பெற்றது.

அதன்பின் 16,000 அமெரிக்க ஊழியர்களை பணி நீக்கம் செய்தது. அதே போல் 2025 இல் ஓரிகானில் உள்ள மற்றொரு நிறுவனத்துக்கு 1,698 எச்-1பி விசா வழங்கப்பட்டது. அந்த நிறுவனம், 2,400 அமெரிக்கர்களை ஜூலை மாதம் நீக்கியது. 3 ஆவது நிறுவனம் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் இது வரை அமெரிக்க பணியாளர்களை 27,000 ஆக குறைத்து விட்டது. இந்த நிறுவனம் இதுவரை 25,075 எச்-1பி விசா பெற்றுள்ளது. இன்னொரு நிறுவனம் 1,000 அமெரிக்கர்களை பணி நீக்கம் செய்தது.

இந்த சூழ்நிலையில்தான் எச்-1பி விசாவுக்கு கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டது. அமெரிக்கர்களுக்குத்தான் முதல் உரிமை. அமெரிக்காவில் அமெரிக்கர்களுக்கு கிடைக்க வேண்டிய பணிகளை மீட்டு கொண்டு வருவதுதான் ஜனாதிபதி ட்ரம்ப்பின் நோக்கம். அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதற்காகத்தான ஜனாதிபதி ட்ரம்ப்பை அமெரிக்கர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, அனைத்து வேலை வாய்ப்புக்கான பலன்களும் அமெரிக்காவில் பிறந்தவர்களுக்குத்தான் செல்கின்றன.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# பாக்ராம் விமான தளத்தை திருப்பித் தர வேண்டும்

## ஆப்கானிஸ்தானுக்கு ட்ரம்ப் புதிய எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் உள்ள பாக்ராம் விமான தள கட்டுப்பாட்டை திருப்பித் தர வேண்டும் என ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் கடந்த 2021 இல் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதனையடுத்து, பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும் என்றும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். ஆனால், அந்த அறிவிப்புக்கு மாறாகவே பல்வேறு சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர்.

இதனிடையே அமெரிக்காவுக்கும், தாலிபானுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் மூலம் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறின.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புதிய எச்சரிக்கை விடுத்துள்ளார். அதில், “பாக்ராம் விமான தளத்தின் கட்டுப்பாட்டை அமெரிக்காவிடம் ஆப்கானிஸ்தான் கூடிய விரைவில் ஒப்படைக்க வேண்டும். அந்த விமானத் தளத்தை திருப்பித் தரவில்லை என்றால், மோசமான விஷயங்கள் நடக்கும்” என்று எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ராம் விமான தளத்தில் மீண்டும் அமெரிக்க படைகளை குவிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். ஏனென்றால், அந்த விமானப்படை தளம் சீனாவுக்கு அருகில் இருப்பதால் அங்கு படைகளை குவிக்க விரும்புகிறார் என கூறப்படுகிறது.

அமெரிக்காவால் கட்டப்பட்ட பாக்ராம் விமான தளம், பல சர்வதேச விமான நிலையங்களை விட நீளமான ஓடுபாதைகளைக் கொண்டுள்ளது, மேலும் பல்வேறு தங்குமிடங்கள், மருத்துவமனைகள், எரிபொருள் கிடங்குகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

மேலும், அமெரிக்க துருப்புகளுக்கு உதவும் வகையில், இப்பகுதியிலேயே பர்கர் கிங் மற்றும் பிட்ஸா ஹட் போன்ற துரித உணவு கடைகளும், துணி கடைகளும் இடம் பெற்றுள்ளன. சீனாவுக்கு அருகாமையில் இருப்பதால், இந்த விமானப்படை தளம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

கனடா முரசு
திங்கட்கிழமை 22/09/20255



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மார்க் கார்னி உரையாற்ற மாட்டார்

02



# பாலஸ்தீன தனி அரசை அங்கீகரிப்பதில் பிரித்தானியாவுடன் இணைந்தது கனடா

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், இஸ்ரேல் குடியேற்றங்களை விரிவுபடுத்தவும், காசா மீதான போரை தீவிரப்படுத்தவும் திட்டமிட்டுள்ள நிலையில், பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரிப்பதில் கனடா, அவுஸ்திரேலியா மற்றும் போர்த்துகல் ஆகியன ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்துள்ளன.

கனேடிய பிரதமர் மார்க் கார்னி பாலஸ்தீன அரசை அங்கீகரிப்ப தாக கடந்த ஞாயிற்றுக் கிழமை அறிக்கை யொன்றினூடாக அறிவித் துள்ளார்.

03

# கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு

கனடாவில் கொவிட் 19 தொற்றாளர் எண்ணிக்கயில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடா அரசு வெளியிட்ட அண்மைய அறிக்கையின்படி, நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனைகளில் நேர்மறை முடிவுகள் கூடுதலாக கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த 7 ஆம் திகதியுடன் முடிந்த வாரத்தில், கடந்த வாரத்தை ஒப்பிடும்போது 9.6 வீத அதிகரிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கிறது.

அண்மைய வாரங்களில் பதிவான வைரஸ் பரவல்களில் 99 வீதமானவை கொவிட் -19 சம்பவங்களாகவே உள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.

“கொவிட் -19 இப்போது ஒரு பருவ கால வைரஸாகவே மாறிவிட்டது.வருடம் முழுவதும் பரவினாலும், கோடை காலத்தில் குறைவாகி, இப்போது மீண்டும் அதிகரிக்கிறது,” என மருத்துவ நிபுணர் மார்லா ஷாபிரோ தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் வீட்டு பரிசோதனைகள் செய்யாமல் இருப்பதும், முந்தைய ஆண்டுகளைப்போல கடுமையாக பாதிக்கப்படாததும் காரணமாக உண்மையான எண்கள் இன்னும் அதிகமாக இருக்கக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.





# ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மார்க் கார்னி உரையாற்ற மாட்டார்

அடுத்த வாரம் நியூயோர்க் செல்லும் கனடா பிரதமர் மார்க் கார்னி, ஐ.நா. பொதுச் சபையில் வெளிநாட்டு கொள்கை குறித்த முக்கிய உரையாற்றமாட்டார் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கு பதிலாக, கனடாவின் வெளிவிவகார அமைச்சர் அனிதா அனந்த் செப்டம்பர் 29 ஆம் திகதி பொதுச் சபையில் உரையாற்ற உள்ளார்.

கடந்த ஜூலை 11 வெளியிடப்பட்ட இடைக்கால பேச்சாளர் பட்டியலில் கார்னி செப்டம்பர் 27 காலை உரையாற்றுவார் என குறிப்பிடப்பட்டி ருந்தது.

ஆனால் செப்டம்பர் 5 வெளியிடப்பட்ட புதுப்பிப்பு பட்டியலில் அனந்த் கனடாவின் பிரதிநிதியாக இருப்பார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கார்னிக்கு வழங்கப்பட்ட உரையாற்றும் நேரம் அவரை மீண்டும் நியூயார்க் திரும்பிச் செல்ல வேண்டிய சூழலை உருவாக்கியதால் மாற்றம் செய்யப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# கனடாவிற்குள் நுழைய முயன்ற 16 பேர் பொலிஸாரால் கைது

கனடாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 16 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கியூபெக்கில் உள்ள சனெ் பேர்னார்ட்டி லாகோல் அருகே கனடா எல்லை பாதுகாப்பு பொலிஸார் மேற்படி நபர்களை கைது செய்துள்ளனர்.

மொத்தம் 18 பேர் கொண்ட குழுவில் 2 பேரை இன்னும் தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் எல்லையை கடக்க முயன்றனர் என அந்த நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதால் மேலும் தகவல் வெளியிட பொலிஸார் மறுத்துள்ளனர்.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் காட்டுத் தீ குறித்து எச்சரிக்கை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் காட்டுத் தீ தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தின் வடக்கு மற்றும் கடற்கரை பகுதிகளில் மழை பெய்தாலும், வெப்பநிலை சிறிது குறைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் புதிய காட்டுத் தீ ஏற்படும் அபாயம் தொடர்ந்து நீடித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய புதுப்பிப்பில், காரிபூ பகுதி மற்றும் தென்கிழக்குப் பகுதிகள் இன்னும் வெப்பமாகவும் உலர்ந்தும் காற்று வீசும் நிலை நீடிப்பதால், வெளிப்புற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மாகாணத்தில் செயல்பாட்டில் உள்ள காட்டுத் தீகள் சுமார் 120 ஆக குறைந்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 9 தீகள் அணைக்கப்பட்டுள்ளன, ஆனால் 3 புதிய தீகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஹோல்ட்ரி கிரிக் Holtry Creek பகுதியில் இந்த வாரம் வெளியிடப்பட்ட வெளியேற்ற எச்சரிக்கை நீக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இருப்பினும், குறைந்தது ஒரு வெளியேற்ற உத்தரவும், சில எச்சரிக்கைகளும் இன்னும் அமலில் உள்ளன.



## பாலஸ்தீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் "பாலஸ்தீன அரசு மற்றும் இஸ்ரேல் அரசு இரண்டிற்கும் அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியைக் கட்டியெழுப்புவதில் தங்கள் கூட்டாண்மையை" வழங்கியுள்ளார்.

இஸ்ரேலிய அரசாங்கம் "பாலஸ்தீன அரசு உருவாகும் வாய்ப்பை எப்போதும் நிறுவுவதைத் தடுக்கும் முறையாக" செயல்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"பாலஸ்தீன அதிகார சபையின் தலைமையிலான பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது, அமைதியான சகவாழ்வையும் ஹமாஸின் முடிவையும் விரும்புவோருக்கு அதிகாரம் அளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது எந்த வகையிலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தாது, அதற்கான எந்த வெகுமதியும் அல்ல," எனவும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி குறிப்பிட்டுள்ளார். பாலஸ்தீன அதிகாரசபை கனடா விற்கு அதன் ஆட்சியை சீர்திருத்துவதில் நேரடி உறுதிமொழிகளை வழங் கியுள்ளது.

அதே நேரத்தில், அவுஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாகவும் அறிவித்தது.

கனடா மற்றும் பிரித்தானியாவுடன் இணைந்து அவுஸ்திரேலியாவும் அங்கீகரிப்பது இரு நாடு தீர்வுக்கான சர்வதேச முயற்சியின் ஒரு பகுதியாகும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அல்பானீஸ் ஒரு அறிக்கையினூடாக தெரிவித்துள்ளார்.